# யா/நாவற்குழி மகா வித்தியாலயம்



## பரிசளிப்பு நிகழ்வு - 2006
## பரிசில் நாள் - 24.01.2008

வியாழன் காலை 9.30மணி

**தலைமை : திருமதி வ. மேகலிங்கம்.**
(முதல்வர், யா/நாவற்குழி ம.வி.)

**பிரதம விருந்தினர்:**
பேராசிரியர் பொ. பாலசுந்தரம்பிள்ளை PhD Durham அவர்கள்
வாழ்நாள் பேராசிரியர், முன்னாள் துணைவேந்தர்,
யாழ்ப்பாண பல்கலைக்கழகம்.

**சிறப்பு விருந்தினர்:**
திரு. வே. பாராளன் அவர்கள்
தொழில்நுட்ப உத்தியோகத்தர்
வலயக்கல்வித் திணைக்களம், தென்மராட்சி.

## எமது பாடசாலையின் மகுடவாக்கியம்

ஒழுக்கமும் கல்வியும் உயிரெனப்படும்

### எமது நோக்கு (VISION);

சமூக கட்டமைப்புகளுடன் ஒத்திசைவாக இணைந்து செல்லக்கூடிய ஒழுக்கமும் திறமையும் மிக்க சிறந்த பிரஜைகளை உருவாக்குதல்

### எமது பணிக்கூற்று (MISSION);

அர்ப்பணிப்புடைய ஆளணி வளத்தையும் ஆற்றல் மிக்க சமூகச் சூழலையும் பயன்படுத்தி, சமூக செல்நெறிகளுடன் இணைந்து செல்லக்கூடிய விதத்தில் அறிவு, திறன்கள் மனப்பாங்கு என்பவற்றை மேம்படுத்தி, ஒழுக்கமும் திறமையும் மிக்க சிறந்த பிரஜைகளை உருவாக்கக்கூடிய விதத்தில் கல்வி நடவடிக்கைகளை வடிவமைத்துச் செயற்படுத்தல்.

# பாடசாலைக்கீதம்

உயிரினும் இனியநம் உயர்வாழ்வினையே
உணர்வொடு போற்றுவோம் வாரீர்!
ஓங்குக கல்வி செல்வ மோஙகை
ஒளி திகழ் தெய்வீக வாழ்க்கை
ஓங்குக தேச சுதந்திர மெங்கும்
ஓங்குக சமரச வேட்கை

-உயிரினும்

ஒரு குலமென உயிர் வாழ்வோம்
உளமதில் நடுநிலை சேர்வோம்
உயர்தர நமதுயர் மகாவித்தி யாலயம்
உருவளர் நாவற்குழியினை நினைவோம்
ஓங்குக தேச சுதந்திர மெங்கும்
ஓங்குக சமரச வேட்கை

## அதிபரின் பரிசளிப்பு நாள் அறிக்கை :

எமது அழைப்பை ஏற்று பிரதம விருந்தினராக வருகைதந்து எங்களை மகிழ்வித்துக் கொண்டிருக்கும் யாழ். பல்கலைக்கழகத்தின் முன்னாள் துணைவேந்தரும், வாழ்நாட் பேராசிரியருமான மதிப்பிற்குரிய பொ. பாலசுந்தரம்பிள்ளை அவர்களே, சிறப்பு விருந்தினராக வருகை தந்து எங்களை கௌரவப்படுத்தி நிற்கும், தென்மராட்சி வலயக் கல்விப்பணிமனையைச் சேர்ந்த தொழில்நுட்ப உத்தியோகத்தர் திரு. வே. பாராளன் அவர்களே, எமது வித்தியாலயத்தின் பழைய மாணவரும், எமது வித்தியாலய வளர்ச்சியில் பெரிதும் உறுதுணையாகநின்று உதவியவருமான திரு. முத்துராசா சிறிகாந்தன் (பாபு) அவர்களே, மற்றும் இங்கே வருகை தந்திருக்கும் கல்விமான்களே, அயற்பாடசாலை அதிபர்களே, எமது வித்தியாலய ஆசிரியப் பெருந்தகைகளே, கல்விசாரா ஊழியர்களே, பெற்றோர்களே, நலன்விரும்பிகளே, எமது பாடசாலை அபிவிருத்திச்சங்க உறுப்பினர்களே, பழைய மாணவர்களே, எமது மாணவச் செல்வங்களே உங்கள் அனைவரையும் பெருமை தரும் இந்நாளில் உளம் நிறைந்த மகிழ்வோடு வருக, வருகவென வரவேற்று நிற்கின்றேன்.

"நாம் ஆகாய விமானங்களில் பறக்ககற்றுக்கொண்டு விட்டோம். வர்ணத் தொலைக்காட்சிகளில் உலகநிகழ்ச்சிகள் அனைத்தையும் கண்டு களித்து வருகின்றோம். அணுமின் நிலையங்களை இயக்கி வருகின்றோம். ஆனால் குழந்தைகளை எப்படி வளர்ப்பது என்பதைத் தான் இன்னும் நாம் கற்றுக் கொள்ளவில்லை" என்று கூறினார் ஹெர்பர்ட் வி. ப்ரோச்னோவ் (Herbert V. Prochnow) ஆம் இது உண்மைதான். குழந்தை வளர்ப்பு என்பதும், பராமரிப்பு என்பதும் மிகவும் சிரமமான ஒரு கலைதான். இந்த இரண்டும் மட்டுமன்றி இவர்களுக்கு கற்பித்தல் என்பதுவும் கூட கடினமான ஒரு கலையாகவே இன்று பரிணமித்து விட்டது.

இங்கே அறிஞர் டெஸ்டோவுச்சர் (Destoycher) என்பவரது கூற்று நினைவுக்கு வருகிறது. "கலையை உருவாக்குவது என்பது மிகவும் கடினமானது. ஆனால் அதனைக் குறை கூறுவது மிகவும் சுலபமானது" என்றார் அவர். ஆம் கடினமான இந்த கலையின் பங்குதாரர்களாக இருக்கும் எமது மாணவச் செல்வங்களுக்கு பரிசில் வழங்கி கௌரவிக்கும் இந்த நன்நாளில் எமது அழைப்புக்கு மதிப்பளித்து, பெறுமதி மிக்க தங்களது நேரத்தினை ஒதுக்கி, எமது பாடசாலைச் சமூகத்தினைக் கௌரவிக்க வருகை தந்திருக்கும் எங்கள் தேசத்தின் பெறுமதிமிக்க கல்வித்தூண்களில் ஒருவரான பேராசிரியர் பொ. பாலசுந்தரம்பிள்ளை அவர்களே, பல்துறை சார்ந்த வகையில் நீங்கள் முன்வைக்கும் புரட்சிகரமான சிந்தனைக் கருத்துக்களை பல்வேறு தொடர்பூடகங்கள் வாயிலாக நாம் அறிந்து பெருமிதம் கொண்ட நாட்கள் பல. எமது தேச அபிவிருத்தி, கல்வி மேம்பாடு, சுற்றுச்சூழல் பாதுகாப்பு, நிலக்கீழ் நீர்வளம் பேணல், நகர அமைப்பு, வீதியோர மரநடுகை, உவர்தரை மீட்பு, தொண்டைமானாறு கடல் நீரேரியை நன்னீராக்குதல் என பரந்துபட்டவகையில் வெளிப்பட்டு நின்ற திட்டங்கள், உங்களது பெருமைகளையும் பெறுமதிகளையும் எமது தேசத்துக்கு வெளிப்படுத்தி நின்றன. யாருமே கவனத்தில் எடுத்துக்கொள்ளாத விடயங்களில் கூட உங்களது கவனம் பாய்ச்சப்பட்டு அது தொடர்பான ஆய்வுகள் செய்யப்பட்டு, கருத்துக்கள் முன்வைக்கப்பட்டமையினை நாம் பல்வேறு நிலைகளில் கண்டு பெருமைப்பட்டிருக்கின்றோம். எமது தேசத்தில் இருந்து அருகிவரும் அரிய உயிரினமான செண்பகப்பறவைக்கு ஒரு சரணாலயம் அமைக்க வேண்டியது அவசியமாகும் என பல வருடங்களுக்கு முன்பாகவே நீங்கள் தெரிவித்த கருத்து இன்றும் எமக்கு ஒரு உதாரணமாக நினைவில் நிற்கின்றது. இவற்றுக்கும் அப்பால் இன்னுமொரு திசையில், சிறுவர் உரிமைகள், பெண்விடுதலை, தொழிலாளர் நலன்பேணல், என்ற வகையில் நீங்கள் முன்வைக்கும் கருத்துக்கள் கூட எங்களை பல நாட்கள் சிந்திக்கத்தூண்டி இருக்கின்றன.

"பின் வாங்காதீர்கள், விவாதித்துக் கொண்டும் இருக்காதீர்கள். அடிக்கடி மன்னிப்புக் கேட்காதீர்கள். நீங்கள் செய்ய ஆரம்பித்ததை செய்து முடியுங்கள். மற்றவர்கள் குலைத்துக்கொண்டிருக்கட்டும்." என்றார் நெல்லி மெக் கிளிங் (Nellie mc cling) துணிச்சலோடு நீங்கள் முன்னெடுத்து, வெற்றிகண்ட பல சாதனைகளை அறிந்து கொள்ளும் போது நெல்லி மெக் கிளிங் கூறிய இக்கூற்றே எமக்கு நினைவுக்கு வருகிறது.

இந்த வகையில் ஒரு புரட்சிகரமான சிந்தனையாளரான, துணிச்சல்மிக்க நிர்வாகியான உங்களை இந்நிகழ்விற்கு பிரதம விருந்தினராக அழைத்து வரவேற்று நிற்பதில் எமது பாடசாலைச் சமூகம் பெருமிதம் கொண்டு மகிழ்வடைகின்றது.

எமது அழைப்பை ஏற்று சிறப்பு விருந்தினராக இங்கு வருகைதந்து எங்களை கௌரவப்படுத்தியபடி இங்கே அமர்ந்திருக்கும் எமது வலய தொழில்நுட்ப அலுவலரான திரு. வே. பாராளன் அவர்களே எமது பாடசாலையின் பௌதீக வளத்தேவைகளையும், இன்றுள்ள அவற்றின் நிலைகளையும் மிக நன்றாக விளங்கிக் கொண்ட நீங்கள் வாய்ப்புக்கள் கிடைக்கும் ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் எமது வித்தியாலயத்தினது வளர்ச்சிக்காக பங்களித்து வருவதனை எமது பாடசாலைச் சமூகம் நன்கு அறியும். நியாயத்தின் வழி நின்று தொழிற்படும் தங்களது சேவையின் பலத்தில், எமது பாடசாலைக் கட்டிடங்கள் பல உறுதியும் அழகும் பெற்றபடி எழுந்து நிற்கின்றன. "நல்ல மாற்றங்கள் வெளியில் இருந்து வருவதில்லை. அவை உள்ளிருந்து தான் உருவாக்கப்படல் வேண்டும். சட்டங்களின் துணையைக் கொண்டு மட்டும் ஒருவரிடம் நல்ல குணங்களை வளர்க்க முடியாது." என்றார் ஜேம்ஸ் கார்டினல் கிப்பன்ஸ் (James Cardinal Gibbons) தங்களது துணிச்சல் மிக்க செயற்பாடுகளைக் காணும் ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் கிப்பன்ஸ்ஸினுடைய கூற்றே எமது நினைவுக்கு வருகின்றது. பக்கச்சார்பற்ற நியாயத்தன்மையும் துணிச்சலும் மிக்க செயல் வீரரான

உங்களை இந்த இனிய நாளில் சிறப்பு விருந்தினராக அழைத்து மகிழ்வுடன் இணைந்து நிற்கிறது. எமது பாடசாலைச் சமூகம்.

எமது அழைப்பை ஏற்று இந்த இனிய நிகழ்வில் சிறப்பு விருந்தினராக வருகை தந்து எமது பாடசாலைச் சமூகத்தை மகிழ்வித்துக் கொண்டிருக்கும் எமது வித்தியாலய பழைய மாணவரான திரு. மு. சிறிகாந்தன் அவர்களே, உங்கள் பொதுநல மனப்பாங்கினை நாம் பெருமையுடன் வாழ்த்தி நிற்கின்றோம். எமது வித்தியாலயத்தின் அபிவிருத்திச் செயற்பாடுகளில் தாங்கள் பங்காளியாக இருந்து பல்வேறு வகைகளில் துணைபுரிந்து வருகின்றீர்கள். அதற்கு ஒரு நல்ல உதாரணமாக இன்றைய இந்த நாளினையே நாம் இக்கிராமத்திற்கு எடுத்துக்கூற விரும்புகின்றோம். இன்றைய இந்த நாளின் செலவினைப் பொறுப்பேற்றிருக்கும் தங்களின் கொடையுள்ளத்திற்கு இங்கு இந்த நேரத்திலும் எமது வித்தியாலயச் சமூகம் நன்றி கூறி நிற்கிறது. எமது மாணவச் செல்வங்களது கல்விச் செயற்பாடுகள், மற்றும் இணை பாடவிதானச் செயற்பாடுகளுக்கு உற்றதுணையாக இருந்து தாங்கள் புரிந்து வரும் உதவிகளால் நாங்கள் புளகாங்கிதம் கொண்டு நிற்கின்றோம். ஒரு நல்ல மனிதனுக்கு அவன் உயிருடன் வாழ்ந்து வரும் போது, அல்லது இறந்தபிறகு கூட எந்த ஒரு கெடுதலும் ஏற்படாது. என்றார் தத்துவஞானி சேக்கிரதீஸ், அவரது அந்தக் கூற்றினை நிருபிப்பதைப் போல உங்களது வாழ்வும் அமைந்திருப்பதனை இட்டு நாம் மிகமிக மனமகிழ்வு கொண்டபடி உங்களை இங்கே வரவேற்று நிற்கின்றோம்.

# எமது மாணவர்களும் அவர் தம் வெளிப்பாடுகளும்

எமது வித்தியாலயத்தில் இன்றைய தினத்தில் தரம் 1 தொடக்கம் தரம் 13 வரையிலான வகுப்புக்களில் 613 மாணவர்கள் தமது கல்வித் தேவைகளை நிறைவு செய்து வருகின்றனர்.

| வகுப்புப்பிரிவு | ஆண் | | பெண் | | மொத்தம் | |
|---|---|---|---|---|---|---|
| | 2006 | 2007 | 2006 | 2007 | 2006 | 2007 |
| 01 - 05 | 142 | 138 | 131 | 108 | 273 | 246 |
| 06 - 09 | 112 | 110 | 109 | 107 | 221 | 217 |
| 10 - 13 | 68 | 75 | 79 | 75 | 147 | 150 |
| மொத்தம் | 322 | 323 | 319 | 290 | 641 | 613 |

## மாணவர் வரவு

எமது பாடசாலைச் சமூகத்தின் கல்வி வளர்ச்சியை மேம்படுத்த எமது வித்தியாலயத்தாய் தன்து முழு ஆற்றலுடனும் அர்ப்பணிப்புச் சிந்தையுடனும் தயாராய் இருக்கின்றாள். இருந்தும் அவளிடமிருந்து உரிய பயனைப் பெற்று தம்மை முன்னேற்றும் நோக்கம் எமது மாணவர் மத்தியில் குறைவாகவே உள்ளதை எம்மால் அறிய முடிகிறது. எக்காலத்திலும் அழியாத சொத்தாக விளங்கக் கூடியது கல்விச் செல்வம் மட்டுமே. இக்கல்விச் செல்வம் மூலமே ஒருவர் ஒழுக்கத்தையும் பேணி நடக்கக்கூடியதாக உள்ளது.

இங்கு வருகை தந்திருக்கும் பெற்றோர்களே, பழைய

மாணவர்களே உங்களிடம் நான் தாழ்மையாக ஒரு விடயத்தைக் கோரி நிற்கின்றேன். தயவு செய்து உங்கள் பிள்ளைகளை, உங்கள் உறவுகளை ஒழுங்காகப் பாடசாலைக்கு அனுப்பி உதவுங்கள் அவர்கள் மத்தியில் காணப்படும் வரவு ஒழுங்கீனம் என்பதும் அவர்கள் கற்றல் செயற்பாடுகளில் பின்தங்கியிருப்பதற்கு ஒரு பிரதான காரணமாக அமைகின்றது.

இவ்வாறான நிலைமைகளிலும் இம்மாணவர்களை சாதனையாளர்களாக மாற்றமுயலும் எமது செயற்பாடுகள் உங்கள் அனைவரினதும் ஒத்துழைப்புடன் மேலும் தொடர தங்களது இந்த உதவி துணைபுரியும் என்பதை இத்தருணத்தில் கூறி நிற்கின்றேன்.

க. பொ. த சாதாரண பரீட்சையில் 2005ம் ஆண்டு 56 மாணவர்கள் தோற்றிய நிலையில் 13 மாணவர்கள் க. பொ. த. உயர்தரத்திற்கு தகுதி பெற்றுள்ளனர். 2006ம் ஆண்டு 33 மாணவர்கள் பரீட்சைக்குத் தோற்றி 10 மாணவர்கள் க. பொ. த. உயர்தரத்திற்கு தகுதி பெற்றுள்ளனர். இனி வருங் காலங்களில் சித்தியடையும் வீதத்தை அதிகரிக்கவேண்டிய பொறுப்பு எங்கள் மீதும் உங்கள் மீதும் சுமத்தப்பட்டிருப்பதனை மிக நன்றாக உணர்ந்து நாங்கள் அனைவரும் தக்கவாறு செயற்பட வேண்டிய தருணம் இதுவாகும்.

## க. பொ. த. உயர்தரம்

2006ம் ஆண்டு நடைபெற்ற க. பொ. த. உயர்தரப்பரீட்சைக்கு எமது வித்தியாலயத்திலிருந்து 10 மாணவர்கள் தோற்றியிருந்தார்கள். அவர்களில் 07 மாணவர்கள் சித்தியடைந்துள்ளனர். இவர்களில் க. கயேந்தினி என்ற மாணவி மட்டக்களப்பு பல்கலைக்கழகத்தில் தனது உயர்கல்வியை மேற்கொண்டு வருகிறார். என்பது குறிப்பிடத்தக்கது.

## திரு / திருமதி வைரமுத்து ஞாபகார்த்த புலமைப் பரிசில் திட்டம்

கடந்த வருடங்களைப் போலவே இந்த வருடமும் க. பொ. த. சாதாரண தரத்தில் இறுதிப் பரீட்சை எழுதி மிகச்சிறந்த பெறுபேற்றைப் பெறும் மூன்று மாணவர்களுக்கு தலா 20000/-, 10000/-, 5000/- என்ற வகையில் திரு. திருமதி வைரமுத்து ஞாபகார்த்த புலமைப்பரிசில் திட்டத்தினை செயற்படுத்துவதற்கு தேவையான நிதித்தொகையை நாவற்குழி கிழக்கைச் சேர்ந்த திரு. வி. நடராஜா அவர்கள் வழங்கியிருந்தார்கள். 2006ம் ஆண்டு க. பொ. த. சாதாரண தரப் பரீட்சையில் சிறந்த பெறுபேறுகளைப் பெற்ற செல்வி கோ. ருசந்தா, செல்வி அ. அகலியா, செல்வி அ. நிசாளினி ஆகியோருக்கு முறையே 20000/-, 10000/-, 5000/- பரிசுத்தொகை வழங்கப்பட்டது. இந்தத் பரிசுப் பணத்தை வாரி வழங்கிய பெருமகன் திரு. வி. நடராஜா அவர்களுக்கும் அவர்தம் குடும்பத்தினருக்கும் எமது வித்தியாலய சமூகம் நன்றி கூறி நிற்கிறது.

## மாணவ முதல்வர் சபை

எமது வித்தியாலய மாணவர்களிடையே ஒழுங்கு கட்டுப்பாடு என்பவற்றைப் பேணுவதில் ஆசிரியர் குழாத்துக்கு உதவியாக மாணவ முதல்வர் சபை செயற்பட்டு வருகிறது. இச்சபையிலே ஆசிரியர்களால் சிபார்சு செய்யப்பட்டு அதிபரினால் நியமிக்கப்பட்ட தரம் 8 தொடக்கம் தரம் 13 வரையிலான முப்பத்தைந்து மாணவர்கள் இணைக்கப் பட்டிருக்கிறார்கள். இவர்கள் அனைவரும் தமது கடமைகளை சிறப்பாக ஆற்றி வருவதனை இட்டு அவர்களை நான் பாராட்டி நன்றி கூறுகின்றேன்.

இவர்களை நெறிப்படுத்தும் ஒழுக்காற்றுச் சபை உறுப்பினர்களுக்கும் எனது நன்றிகளை இச்சந்தர்ப்பத்தில் தந்து நிற்கின்றேன்.

## இணைபாடவிதானச் செயற்பாடுகள்;

1) இல்ல மெய்வல்லுனர் திறனாய்வு;

எமது வித்தியாலத்தாய் இவ்வருடத்திற்கான இல்லமெய்வல்லுனர் திறனாய்வினை 10.02.2006ல் எமது வித்தியாலய மைதானத்தில் மிக விமர்சையாக நிறைவேற்றி முடித்திருக்கின்றாள். இந்த நிகழ்விற்கு எமது வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி அருளேஸ்வரி வேதநாயகம் அவர்கள் பிரதம விருந்தினராக வருகை தந்திருந்து எங்களைக் கௌரவப் படுத்தியிருந்ததனை இந்த நாளில் நாம் நன்றியுடன் நினைவு கூறுகின்றோம்.

இக்காலப்பகுதியில் தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலைக்கிடையிலான மெய்வன்மைப் போட்டிகளில் பங்குபற்றிய எமது வித்தியாலய மாணவர்களில் எட்டு மாணவர்கள் வலய மட்டப் போட்டிகளுக்காக தெரிவு செய்யப்பட்டு பங்கு கொண்டு எமது பாடசாலைக்கு பெருமை சேர்த்திருந்தனர்.

தென்மராட்சி பாடசாலைகளுக்கிடையிலான உதைபந்தாட்டப் போட்டிகளில் எமது பாடசாலை அணிகளும் கலந்து கொண்டு தமது திறமைகளை மீண்டும் ஒருமுறை வெளிப்படுத்தியிருந்தனர். இதன் விளைவாக வலயமட்டத்தில் 19 வயதுப்பிரிவில் எமது பாடசாலை உதைபந்தாட்ட அணி முதலாம் இடத்தைப் பெற்றமை குறிப்பிடத்தக்கது.

இதே போன்று வலய மட்ட கிறிக்கெற் போட்டிகளிலும் எமது பாடசாலையின் மாணவ வீரர்கள் தமது திறமைகளை வெளிப்படுத்தி

வலய மட்டத்தில் இரண்டாம் இடத்தைப் பெற்றுக் கொண்டனர். இவ் வெற்றிக்கனிகளைப் பெற்றுத்தந்த வீரர்களுக்கும் துணைநின்ற ஆசிரியர்களுக்கும் இங்கே நான் நன்றி கூறி மகிழ்கின்றேன்.

2) தமிழ்த்தினம்;

எமது வித்தியாலய அன்னை எம் தாய் மொழியாம் தமிழ்மொழிக்கு தமிழ்த்தினவிழா எடுத்த நிகழ்வு 10.08.2006ல் மிகச் சிறப்பாக நடந்தேறியது. மாண்புடைய மனிதராம் செஞ்சொற்செல்வர். ஆறுதிருமுருகன் ஐயா அவர்கள் பிரதம விருந்தினராகவும், பேராசிரியர் கலாநிதி அ. சண்முகதாஸ் அவர்கள் சிறப்பு விருந்தினராகவும் கலந்து எங்கள் கிராமத்தையே கௌரவப்படுத்திய இந்த நிகழ்வு எமது வித்தியாலய வரலாற்றில் பொன் எழுத்துக்களால் பொறிக்கப்படவேண்டிய ஒன்றாகவே இருந்தது. சுமார் இருநூற்றி ஐம்பதுக்கும் மேற்பட்ட மாணவர்கள் தமிழ்மொழி சார்ந்த தமது திறமைகளை வெளிப்படுத்தி சான்றிதழ்களைப் பெற்றுக் கொண்டமை குறிப்பிடத்தக்கது.

இவ்வாண்டு வலய மட்டத்தில் நடாத்தப்பட்ட தமிழ்த் தினப்போட்டிகளில் எமது பாடசாலை மாணவர்களால் ஆற்றப்பட்ட விஷேட கூத்துக்கு இரண்டாம் இடம் கிடைத்தமை குறிப்பிடத்தக்கது. இது மட்டுமன்றி வலயமட்டத்தில் நடாத்தப்பட்ட திருக்குறள் மனனப் போட்டி, வாய்ப்பாடு மனனப்போட்டி, அறநெறிப்போட்டி ஆகியவற்றில் பங்கு கொண்ட எமது வித்தியாலய மாணவச் செல்வங்கள் தமது திறமைகளை வெளிக்காட்டி சான்றிதழ்களைப் பெற்றிருக்கின்றனர். தரம் 4 மாணவி செல்வி வி. லவலக்ஷனா 612 திருக்குறள்களை மனனம் செய்து ஒப்புவித்து வலய மட்டத்தில் சிறப்புப் பரிசில்களைப் பெற்றுக் கொண்டமையினை நான் இங்கே குறிப்பிடவேண்டி உள்ளது.

ஒருவர் தனக்குத்தானே போட்டி போட்டுக் கொண்டு தன்னை இன்னும் சிறந்தவனாக மாற்றிக் கொண்டு வரவேண்டும். இந்தப்பணியை

ஒருவன் தன் வாழ் நாள் முழுவதும் செய்து வரவேண்டும். என்றார் ராணி கிறிஸ்டியானா (Queen Christiana) இவரது இக்கருத்தை உள்வாங்கியபடி தம்மை தமது திறமையை மேன்மேலும் வெளிக்காட்டி சாதனை புரியத்துடித்து நிற்கும் எமது மாணவச் செல்வங்களையும் அவர்களை வழி நடாத்திய ஆசிரியப் பெருந்தகைகளையும் இங்கே நான் நன்றி கூறிப்பாராட்டி மகிழ்வடைகின்றேன்.

### 3) பிற போட்டிகளும் எமது மாணவர்களும்;

எமது வலயத்தால் நடாத்தப்படும் விஞ்ஞான வினாவிடைப்போட்டி, கணித வினாவிடைப்போட்டி, சமூகக்கல்வி பொது அறிவுப்போட்டி, வணிக வினாவிடைப்போட்டி போன்றவற்றிலும் பங்கு கொண்ட எமது மாணவர்கள் அவற்றிலும் சாதனை புரிந்து சான்றிதழ்களைப் பெற்று எமது வித்தியாலயத் தாய்க்கு பெருமை சேர்த்துள்ளார்கள்.

இவ்வாண்டு காலப்பகுதியில் நடைபெற்ற தரம் ஐந்து புலமைப்பரிசில் பரீட்சையில் தோற்றிய மாணவர்களுள் செல்வி ச. கஜேந்தினி, செல்வன் ம. சிவகண்ணன், செல்வன் ச. டிலக்சன் மற்றும் செல்வி ச. சஞ்சீவி, செல்வி மோ. சாளினி போன்றவர்கள் சித்தியடைந்து எமக்கு பெருமை தேடித்தந்திருக்கின்றனர். இம்மாணவர்களையும் அவர்களை வழிநடாத்திய ஆசிரியர்களையும் இங்கே நான் பாராட்டி நன்றி கூறுகின்றேன்.

### 4) பரிசளிப்பு விழா;

எமது வித்தியாலயத்தின் 2004ம் ஆண்டுக்கான பளிசளிப்பு விழா நிகழ்வு 15.09.2005ல் வெகு சிறப்பாக நிகழ்ந்தேறியது. யாழ்ப்பாணப் பல்கலைக்கழக பேராசிரியர் கலாநிதி வி. நித்தியானந்தன் அவர்கள் பிரதம விருந்தினராகவும் எமது வலய பிரதிக்கல்விப்பணிப்பாளர் திரு. கோ. வரதராஜமூர்த்தி அவர்கள் சிறப்பு விருந்தினராகவும் கலந்து சிறப்பித்தமை இன்றைய தினத்தில் நினைவு கூறத்தக்கது.

## 5) உளநலன் பேண் நடவடிக்கைகள்

நேர்மையுடன் வாழும் திறமையை ஒரு குழந்தை வளர்த்து கொள்ளும் போது தான் அந்தக் குழந்தையின் படிப்பு ஆரம்பமாகின்றது. என்பது ஜோன் ரஸ்கின் (John Ruskin) என்பவருடைய கருத்து. நெஞ்சில் உரமும் நேர்மைத்திறனும் மிக்க குழந்தைகளாக எமது மாணவச் செல்வங்கள் வளரவேண்டும் என்ற எதிர்பார்ப்போடு எமது வித்தியாலயத்தில் உளநலன்பேண் செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. எமது இந்த முன்னெடுப்புக்களுக்கு வருடம் தோறும் நல்ல பல உள்ளங்களும் உள்ளூர் மற்றும் சர்வதேச அரச சார்பற்ற அமைப்புகளும் அவ்வப்போது உதவிகள் புரிந்து வருகின்றன. அவ்வாறான உதவிகளுள் சிறப்பாகக் குறிப்பிடக்கூடியது இவ்வாண்டு காலப்பகுதியில் டென்மார்க் செஞ்சிலுவைச் சங்கத்தினரும் யாழ்ப்பாணம் சாந்திகம் நிறுவனத்தினரும் செய்த செயற்திட்டங்கள் எமது மாணவர்களுக்கு மிகப்பெரிய நன்மைகளை வழங்கி நின்றன.

தரம் 6, 7, 8 ஆகிய மூன்று வகுப்புக்களைச் சேர்ந்த சுமார் 180 மாணவர்கள் டெனிஸ் செஞ்சிலுவைச் சங்கத்தினரது உளநலவிருத்தி செயல் திட்டத்தினால் நன்மை அடைந்தனர். இத்திட்ட நிறைவு விழா 20.02.2006ல் மிகவும் விமரிசையாக நடைபெற்றபோது வலிகாம வலய பிரதிக்கல்விப் பணிப்பாளர் திருமதி கோகிலா மகேந்திரன் அவர்கள் பிரதம விருந்தினராக கலந்து கொண்டு எங்களை மகிழ்வித்தமை சிறப்பான ஒரு விடயமாகும்.

சாதனைகளைப் படைப்பதில் மிகவும் கடினமானது அதை ஆரம்பிப்பதுதான் என்பது ஒரு தத்துவவரி. இங்கு எமது மாணவச் செல்வங்களை சாதனை வீரர்களாக்குவதற்கு அவர்களது உடல் உள நலத்தில் கவனமெடுத்து உரிய வழி காட்டல்களை எமது ஆசிரியர்கள் வழங்கி வருகின்றனர். இதற்கு வசதியாக மாணவர்களைத் தனித்தனியாக அணுகி அவர்களது பிரச்சினைகளை விடுவித்து உதவுவதுடன்

பெற்றோரைச் சந்தித்து ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர்கள் இடையிலான இடைவினைத் தொடர்பை வலுப்படுத்தும் நடவடிக்கைகளிலும் எமது வித்தியாலய ஆசிரியர்கள் ஈடுபட்டு வருகிறார்கள். இவ்வாறான ஈடுபாட்டைக்காட்டி செயற்பட்டுவரும் ஆசிரியர்களுக்கு நான் இங்கே நன்றி கூறி பாராட்டி நிற்கின்றேன்.

இவற்றுக்கு மேலாக அறவழிப்போராட்டக்குழு செயல்திறன் அரங்க இயக்கம் போன்ற அமைப்புக்களும் எமது மாணவர்களது உடல், உள மேம்பாட்டுக்காக பல்வேறு வகைகளில் உதவி நின்றன. இக்காலப்பகுதியில் எமது பகுதியின் பொது சுகாதார பரிசோதகராக இருந்த திரு. கா. சிவநேசன் அவர்கள் சுகாதாரம் சார்பான பல கருத்தரங்குகளை எமது மாணவர்களுக்கு நடாத்தி இருந்தனர். இவர்களுக்கும் எமது வித்தியாலய சமூகம் சார்பில நன்றி கூறி நிற்கின்றோம்.

## எமது வித்தியாலய ஆசிரியர் சமூகம்

எமது வித்தியாலயத்தில் நிரந்தர சேவையில் 29 ஆசிரியர்களும் தற்காலிக இணைப்பு பெற்று 04 ஆசிரியர்களும் பணி புரிகின்றனர். இக்காலப்பகுதியில் எமது பாடசாலைக்கு நிரந்தர சேவையில் புதிய ஆசிரியர்களாக செல்வி சுதர்சினி மரியஞானசீலன், திரு. ந. புகன் சிறீந்திரன், திருமதி சைலஜா இரவீந்திரன், திருமதி வ. கேதீஸ்வரசர்மா ஆகியோரும் தொண்டராசிரியர் சேவையில் திரு ம. புவனதாஸ் அவர்களும் இணைந்து கொண்டனர். அர்ப்பணிப்புணர்வோடு அளப்பரிய சேவை புரிந்த இந்த ஆசிரியர்களுள் திரு. ந. புகன் சிறீந்திரன் முதன்மை ஆசிரியராக பதவி உயர்வு பெற்று எமது பாடசாலையில் இருந்து விலகிச் சென்றதோடு, திருமதி சைலஜா இரவீந்திரன் அவர்கள் உடல்நலப் பிரச்சனை காரணமாக எமது வலயத்தில் இருந்து தற்காலிக இடமாற்றம் பெற்று யாழ்ப்பாண வலயத்துக்கும் சென்றுள்ளார்கள்.

எமது ஆசிரியர் குழாமுடன் மிக நீண்ட காலம் இணைந்து பணியாற்றி அர்ப்பணிப்புணர்வுடனும் விவேகமானவகையிலும் திறம்பட இயங்கி எங்கள் பாடசாலைச்சமூகத்தில் தனக்கென ஒரு தனி இடத்தைப் பெற்றிருந்த திருமதி கோ. சிவனொளிச்செல்வன் ஆசிரியை அவர்கள் இக்காலப்பகுதியில் இடமாற்றம் பெற்று யாழ் வலயம் சென்றிருந்தார்.

இக்காலப்பகுதியில் எமது பிரதேசத்தில் இடம்பெற்ற அசாதாரணச் சூழ் நிலைமைகளின்போதும் தொடர்ந்து நிலவும் பல்வேறு பிரச்சனைகளுக்கும் முகங்கொடுத்தபடி பல்வேறு துயர்கள் சோகங்களைச் சுமந்தபடி எமது பாடசாலையின் மாணவச் செல்வங்களுக்கு - அவர்கள் தம் நல்வாழ்வுக்கு ஒளி ஏற்றி வைப்பதற்காக தம் உடல் நலத்தைப் கூட பாராது சேவையாற்றி வரும் எமது வித்தியாலய ஆசிரியர் குழாத்துக்கு இன்றைய இன் நன்நாளில் இக்கிராம மக்கள் சார்பில் நான் நன்றி கூறி நிற்கின்றேன்.

## பாடசாலையின் பௌதீக வள அபிவிருத்தி

எமது பாடசாலையிற்கு இவ்வருடம் மிகவும் வளம் தந்த ஒரு காலப்பகுதியாகவே அமைந்திருக்கின்றது. நாம் எமது வித்தியாலயத் தாயின் வளத்தினைப் பெருக்கிக் கொள்ள எடுத்த பல முயற்சிகளுக்கு எமது பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தினரும் பழைய மாணவர்களும் நலன்விரும்பிகளும் எங்கள் ஆசிரிய குழாமும் இணைந்து உதவி இருக்கின்றனர். இதற்கும் மேலாக யாழ் மாவட்டத்தின் பல பாராளுமன்ற உறுப்பினர்களும் உதவி இருக்கின்றனர்.

குறிப்பாக பாராளுமன்ற உறுப்பினர்களான அமரர் ந. ரவிராஜ் அவர்கள் தரம் 2 வகுப்பறையைத் திருத்துவதற்காக 50000/- வும், பாண்ட் இசைக்கருவிகள் கொள்வனவுக்காக பாராளுமன்ற உறுப்பினர் கௌரவ கஜேந்திரன் அவர்கள் 150000/- வும் வழங்கியிருந்தார்கள். இந்த இரு பாராளுமன்ற உறுப்பினர்களுக்கும் எமது வித்தியாலயத்தாய்

தனது நன்றிகளைக் கூறி நிற்கிறாள்.

இவற்றைவிட டெனிஸ் செஞ்சிலுவைச்சங்க உளநலன் பேண் திட்ட நிதியுதவியால் சேமிக்கப்பட்ட நிதியில் இருந்து 98000/- பெறுமதியான ஒரு புதிய றோனியோ இயந்திரத்தினைக் கொள்வனவு செய்திருந்தோம். அத்துடன் பயன்படுத்திய ஒரு றோனியோ இயந்திரம் ஒன்றினை எமது வித்தியாலய முன்னாள் அதிபர் திரு. த. முத்துக்குமாரசுவாமி அவர்கள் வழங்கி இருந்தார்கள்.

கனடா நாட்டில் வசிக்கும் திரு. சங்கரப்பிள்ளை திரிலோகநாதன் அவர்கள் 2800 H.P சக்தியுடைய ஒரு மின்பிறப்பாக்கியினை அன்பளிப்புச் செய்திருக்கிறார்கள்.

எமது மாணவர்களது கற்றல் மேம்பாடு கருதி நாம் எமது பாடசாலையில் இரண்டு வகுப்பறைகளை இணைத்தே ஒரு நூலகமாக பயன்படுத்தி வருகின்றோம். அந்த தற்காலிக நூலகத்தினை வளமுடையதாக மாற்றி அமைக்க, வர்ணப்பூச்சு மற்றும் மின் இணைப்பு, போன்றவற்றைச் செய்வதற்காக S.C.F நிறுவனம் ரூபாய் 200000 வழங்கி இருந்தது. அத்துடன் ஒரு புதிய கணணியையும் இந்த நிறுவனம் எமக்கு வழங்கியிருந்தது. உண்மையிலேயே S.C.F நிறுவனம் செய்த இந்த உதவிகள் எமது மாணவச் செல்வங்களுக்கு மிகப்பெரிய உதவியாக இருந்தன.

இவற்றுக்கும் அப்பால் எமது பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தினரது ஒத்துழைப்போடு எமது வித்தியாலயத்துக்கான சமையலறை சிற்றூண்டிச்சாலை, துவிச்சக்கரவண்டித்தரிப்பிடம், இரும்பிலான நீர்த்தாங்கி அமைத்தல், பாடசாலை அலுவலக அறை திருத்தி அமைத்தல், மின் இணைப்பு வழங்கல், மலசலகூடத்திற்கான மேலதிக குழி அமைத்தல், தரம் 12, 13 வகுப்பறைகள் புனரமைத்தல், போன்ற வேலைத்திட்டங்கள் நிறைவேற்றி முடிக்கப்பட்டன.

அத்துடன் திணைக்கள நிதி உதவியுடன் பாடசாலைத் தளபாடங்கள் திருத்தியமைத்தல், ஆரம்பப்பிரிவு வகுப்பறைகள் புனரமைத்தல், ஆரம்பப்பிரிவு வகுப்பறைகளிற்கு வர்ணம் பூசுதல் என்பனவும் மேற்கொள்ளப்பட்டன.

இவ்வாறான வேலைத்திட்டங்களை திருப்திகரமாக முன்னெடுக்க என்னோடு உதவி நின்ற ஆசிரியர்கள், பெற்றோர்கள், நலன்விரும்பிகள், பழைய மாணவர்கள் மற்றும் அரசசார்பற்ற நிறுவன அமைப்புக்கள் எமது திணைக்கள அதிகாரிகள் அனைவருக்கும் இத்தினத்தில் நான் நன்றி கூறி நிற்கின்றேன்.

இவ்வாறான பௌதீக வளத்தேவைகளைப் பெற்றுக்கொள்ள நாம் எடுத்த முயற்சிகள் அனைத்துமே வெற்றியளித்தன என்று கூறமுடியாது. பல இடங்களில் நாம் தோல்வியைத் தழுவியுள்ளோம். தோல்வி என்பது என்ன? அதுவும் ஒரு கல்விதான். சிறந்ததான ஒரு வெற்றியை நோக்கி எடுத்து வைக்கும் முதல் அடிதான் (First step) அது என்றார் ஒரு அறிஞர். நாம் அதனைப் பலமாகப் பற்றியுள்ளோம். அது எமக்கு பலமாக இருக்கிறது. அதனால் தான் எமது வித்தியாலயத்தின் பௌதீக வளத்தை மேலும் மேலும் தேடிக் கொள்ள நாம் தினமும் முயன்று கொண்டிருக்கின்றோம்.

எமது மாணவர்களுக்கு வசதியும் பாதுகாப்பும் மிக்க ஒரு விளையாட்டு மைதானம், உள்ளக விளையாட்டுக்கான ஒரு கட்டிட வசதி, ஆறு வகுப்புக்களுக்கு இன்னும் தேவையாக இருக்கும் வகுப்பறை வசதி, அழகியல், தொழில்நுட்பம், மற்றும் தகவல் தொழில்நுட்பம் போன்ற பாடங்களுக்கு பொருத்தமானதும் வளம் மிக்கதுமான வகுப்பறை வசதிகள், பிராத்தனை கூடம், இவை யாவும் எமக்கு தேவையாக உள்ளன.

இவற்றைப் பெற்றுக்கொள்ள நாம் தொடர்ந்தும் முயன்று

வருகின்றோம். மொத்தத்தில் எமது பாடசாலையினை முழுமையான ஒரு பிள்ளைநேயப் பாடசாலையாக மாற்றியமைப்பதற்கான முயற்சிகளில் நாம் ஈடுபட்டு வருகின்றோம். இயற்கையும் இறைவனும் துணைநின்று வாய்ப்புக்களும் கிடைக்கப்பெறுமாயின் எமது பாடசாலை பாராட்டப்படும் அளவுக்கு எதிர்காலத்தில் பிள்ளைநேயப்பாடசாலையாக விளங்கும் என்பதில் தளராத நம்பிக்கையுடையவர்களாக இருக்கின்றோம்.



எமது வித்தியாலய பாண்ட் இசைக்குழுவினர்

# எமது நன்றிக்குரியவர்கள்

"செய்யாமற் செய்த உதவிக்கு வையகமும், வானகமும் ஆற்றலரிது" என்பது தமிழ்மறை. அந்தவகையில் எமது வித்தியாலத்தாயின் மேம்பாட்டுக்காக இக்காலப்பகுதியில் உதவி நின்ற பல இனிய உள்ளங்களை நாம் நன்றியுணர்வோடு நினைவு கூற வேண்டியவர்களாக உள்ளோம்.

முதலில் எமது திணைக்கள வலயக் கல்விப்பணிப்பாளர், பிரதிக்கல்விப்பணிப்பாளர், கணக்காளர் உள்ளிட்ட அனைத்து உத்தியோகத்தர்களுக்கும் நன்றி கூற வேண்டிய பாரிய பொறுப்பில் நாம் உள்ளோம்.

எமது மாணவர்களது உடல் உளத்தேவைகளை நிறைவேற்று வதற்காக, அவர்களது ஆரோக்கிய நிலையினை மேம்படுத்துவதற்காக நாம் நாடி நின்ற வேளைகளில் உடன் வந்து உதவிநின்ற சிறுவர் பாதுகாப்பு நிதிய (இலங்கை) யாழ். கிளையினர், அறவழிப் போராட்டக்குழுவினர், செயல்திறன் அரங்க இயக்கத்தினர், அகதிகள் புனர்வாழ்வு நிறுவனப் பணியாளர்கள், சாந்திகம் நிறுவனப் பணியாளர்கள், எமது பகுதி பொது சுகாதாரப் பரிசோதகர், இலங்கை வங்கி ஊழியர்கள், எமது பகுதி பிரதேச செயலகப் பணியாளர்கள் பிரதேச சபை ஊழியர்கள், எமது பகுதி கிராம சேவையாளர், மற்றும் எமது பாடசாலை அபிவிருத்திச்சங்க உறுப்பினர்கள், பழைய மாணவர்கள், நலன்விரும்பிகள் அனைவருக்கும் இந்த நாளில் நாம் நன்றி கூற வேண்டியவர்களாக இருக்கின்றோம். அத்துடன் எமது வித்தியாலய மாணவர்களது உயர்வாழ்வுக்காக அர்ப்பணிப்பு உணர்வோடு சேவையாற்றும் அனைத்து ஆசிரியப் பெருந்தகைகளையும் பாராட்டி நன்றி கூறி, "பயன் தூக்கார் செய்த உதவி நயன் தூக்கின் நன்மை கடலிற் பெரிது" என்பதை நினைவுக்கு கொண்டு வந்து என்னுரையை முடித்து அமர்கின்றேன்.

நன்றி

வணக்கம்

## அதிபர், ஆசிரியர் விபரம்
## (01.01.2008ல் உள்ளபடி)

1. திருமதி வ. மேகலிங்கம் B.A Dip - in Ed
   Principal S.L.P.S Gr 1
2. திருமதி சு. செல்வராசா B.A Dip - in Ed
   Deputy Principal
3. திரு. ஆ. க. இரவீந்திரன் B.A Dip - in Ed
   Sectional Head
4. திருமதி மீ. பரமேஸ்வரன் B. Ed Primary Trd
   Sectional Head
5. திருமதி யோ. பாலச்சந்திரன் Hindusim Trd Sectional Head
6. திரு. சி. ஜே. திலகரட்ணம் Special Trd Agr
7. திரு. வே. க. சந்திரகுமார் B. Sc. (Ad). Dip in Ed Dip. in Master
   Counsellor.
8. திரு. தி. அற்புதராஜா Maths Trd
9. திரு. சி. மதியழகன் B. Com Dip in Ed Primary Trd
10. திரு. நா. கருணாகரன் Commerce Trd
11. திரு. மு. செங்கையாழியன் Science Trd
12. திரு. ப. கிருபானந்தன் Primary Trd
13. திரு. ஞா. செல்வநாயகம் Soci. St. Trd
14. திரு. சி. நித்தியானந்தராஜா B. B. A Dip in Ed
15. திரு. ம. புனவதாஸ் Dip in fisheres Dip in Political
16. திருமதி யோ. செல்வநாயகம் Music Trd
17. திருமதி ஞா. மரியநாயகம் R. C. Trd
18. திருமதி ந. குகராஜ் English Trd
19. திருமதி நா. செல்வன் Primary Trd
20. திருமதி ந. மகேந்திரன் Home Eco Trd

| | | |
|---|---|---|
| 21. | செல்வி ச. தயாநிதி | Maths Trd |
| 22. | திருமதி சு. அற்புதராஜா | Science Trd |
| 23. | செல்வி சி. சிவாதரி | G.C.E (A/L) |
| 24. | செல்வி ம. சுதர்சினி | B.A |
| 25. | திருமதி சா. ஞானதேவன் | N. T. Dip (Agricuture) |
| 26. | திருமதி வ. கேதீஸ்வரசர்மா | B.A |
| 27. | திருமதி பு. தனபாலசிங்கம் | Primary Trd |
| 28. | செல்வி சோ. கிருஷ்ணவேணி | B.A |
| 29. | திருமதி த. ஜீவபாலன் | N. T. Dip (Science) |
| 30. | திருமதி ம. நரேந்திரராஜா | Primary Trd |
| 31. | திருமதி இ. நித்தியானந்தராஜா | N. T. Dip (Primary) |
| 32. | திருமதி சு. சுந்தரகுமார் | B.A |
| 33. | செல்வி ஆ. மரியநீற்றர் | Primary Trd |
| 34. | திரு. வை. பிறேம்குமார் | B.A (Hons) |
| 35. | செல்வி த. மாதங்கி | B.F.A (Music) |
| 36. | திரு. செ. ஜெயரூபன் | B. Com |
| 37. | திரு. க. ஞானராசா | B.A |
| 38. | செல்வி. இ. மரியஸ்வர்ணா | |
| 39. | செல்வி வே. தேவரஞ்சினி | |
| 40. | செல்வி பா. பவித்ரா | |
| 41. | திரு. சி. இராஜேந்திரன் | (ஆய்வுகூட உதவியாளர்) |

## கல்விசாரா ஊழியர்

1) திரு. செ. அழகராசா

# பரிசில் பெறுவோர் பெயர் விபரம்

## தரம் - 01

1) செ. மதுசன்
2) ச. நிதர்சன்
3) சி. கஜந்தா
4) த. கீர்த்தனா
5) அ. அஜினா
6) றெ. றெபேக்கா
7) ச. கார்த்திகா
8) பொதுத்தகைமை பெற்ற மாணவர் : ஜெ. ஜெயக்குமார்

## தரம் - 02

1) கி. சர்மியா
2) பு. நிருஷன்
3) செ. சிந்துஜா
4) க. ரகுநாத்
5) இ. தாட்சாயினி
6) க. ரெபேக்கா
7) யோ. சபினா
8) பொதுத்தகைமை பெற்ற மாணவர் : க. ரகுநாத்

## தரம் - 03

1) சி. சிவகரன்
2) வி. லவலக்சனா
3) த. பிரதீபன்
4) சு. டிலந்தன்
5) க. சிந்துஜன்
6) அ. அர்ஜுன்
7) ச. கஜேந்திரன்
8) ஸ். ஸ்ராலின்

## தரம் - 04

1) பு. வைஷ்ணவி
2) பா. சுயந்தன்
3) மா. சிவறதன்
4) ச. டதீஸ்
5) பா. திலக்சன்
6) சு. அபிராமி

7) அ. மோசேயன்

8) பொதுத்தகைமை பெற்ற மாணவர் : சி. பிரபூசன்

### தரம் - 05

1) ச. சஞ்சீவி
2) ம. வலன்ரீனா
3) ச. லட்சிகா
4) மௌ. தர்சிகா

5. பொதுத்தகைமை பெற்ற மாணவி : செ. கஸ்தூரி

### தரம் - 06

1) சி. டிலக்சனா
2) கோ. அரவிந்தன்
3) செ. கேசவன்
4) த. மதுரிகா
5) நா. தமிழ்ச்செல்வி
6) செ. பகீரதன்

7) பொதுத்தகைமை பெற்ற மாணவி : ம. சசிந்தா

### தரம் - 07

1) ச. லவண்யா
2) ச. சிந்துஜா
3) சு. சிவானுஜா
4) க. திலாணி
5) இ. வினோஜா
6) பா. கஜீபன்
7) கு. நிதூசனா

8) பொதுத்தகைமை பெற்ற மாணவன் : கி. பகின்ராஜ்

### தரம் - 08

1) சி. சங்கீதா
2) சி. சுயன்சா
3) த. சௌமியா
4) சு. கஜானி
5) சி. கம்சியா
6) வி. வினோ
7) க. கஜனி
8) த. திவாகரன்

8) பொதுத்தகைமை பெற்ற மாணவி : செ. மைதிலி

## தரம் - 09

1) செ. றொசானி
2) அ. சுவர்ணா
3) அ. நிறோஜினி
4) ச. கிருஷாந்
5) த. திலக்

## தரம் - 10

1) ஆ. கஜேந்தினி
2) இ. சுரேக்கா
3) இ. கார்த்திகா
4) ச. கிஷானி
5) ப. அஜந்தன்
6) ச. குலரஞ்சினி
7) ஞா. நிசாந்தன்
8) டே. அனுஷா
9) சி. இராஜ்குமார்
10) ம. டெனோஜா

## தரம் - 11

2006 இல் க. பொ. த. சாதாரணதர பரீட்சையில் சித்தியடைந்து உயர்தரத்திற்கு தகுதி பெற்ற மாணவர்கள்

1) அ. அகலிகா
2) அ. நிசாளினி
3) த. தவலக்சி
4) கோ. ருசந்தா
5) அ. மரியமலர்
6) அ. அனோஜா
7) ப. நிலைக்சன்
8) பா. நிலோஜன்
9) வீ. றேகன்
10) இ. பிரதீப்

## தரம் - 12

1) ந. கோமதி
2) வி. லவப்பிரியா
3) ச. கவுசிகா
4) சு. கஜனி
5) ப. கிஷாந்தன்
6) க. கசில்டா
7) இ. கபில்றாஜ்
8) செ. பவுஜிகா

## தரம் - 13

1) பா. கிருபாலினி
2) த. தவநிதா
3) தே. நிசாந்தினி
4) கு. ருசித்தா

வலயமட்ட உதைபந்தாட்டப் போட்டியில் 19 வயதுப் பிரிவில் 2006ல் முதலாம் இடம் பெற்ற எமது உதைபந்தாட்ட அணி வீரர்கள் விபரம்

1) க. தீபக்
2) இ. கபில்ராஜ்
3) கு. டருளன்
4) க. நிஷாந்தன்
5) சு. சுபாஸ்
6) சி. கனிஸ்ரன்
7) இ. தயேந்திரன்
8) ம. மயூர்க்கரன்
9) ப. நிலைக்சன்
10) ப. கிஷாந்தன்
11) செ. மயூரன்
12) க. கமலராசா
13) த. ஜின்சன்
14) வே. விமலரூபன்

வலயமட்ட கிறிக்கெற் போட்டியில் 19 வயதுப்பிரிவில் 2006ல் 2ம் இடத்தைப் பெற்ற எமது வித்தியாலய கிறிக்கெற் அணி வீரர்கள் விபரம்

1) க. தீபக்
2) இ. கபில்ராஜ்
3) கு. டருளன்
4) க. நிஷாந்தன்
5) சு. சுபாஸ்
6) இ. தயேந்திரன்
7) ப. நிலைக்சன்
8) ப. கிஷாந்தன்
9) த. ஜின்சன்
10) இ. கிஷானந்
11) இ. நநிதாஸ்
12) இ. பிரதீப்
13) ம. நிவாஸ்
14) சு. சுகன்
15) த. திலக்



மென்பந்தாட்ட வீரர் அணி
2006 - 2ம் இடம், வரயமட்டம்



உதைபந்தாட்ட வீரர் அணி
2006 சம்பியன், வலயமட்டம்.



தமிழ்மொழித்தினம் - 2006
பிரதம விருந்தினர் செஞ்சொற்செல்வர் ஆறுதிருமுருகன் அவர்களும்,
சிறப்பு விருந்தினர் கலாநிதி அ. சண்முகதாஸ் அவர்களும்.



இல்லமெய்வல்லுனர் போட்டி - 2006
எமது வலயக்கல்விப்பணிபாளருடன் S.C.F பிரதிநிதி



அமரர் திருமதி சித்திரா முத்துராஜா அவர்கள்

எமது வித்தியாலய பரிசளிப்பு நாள் 2006 தொடர்பான அனைத்துச்
செலவுகளையும் பொறுப்பேற்று உவர்ந்தளித்த பெருமகன்
முத்துராசா சிறிகாந்தன் (பாபு) அவர்களது அமரராகிவிட்ட
அன்னையின் நினைவுகளோடு இவ் அறிக்கை
உங்கள் கைகளில் தவழ்கிறது.

"இன் சொலால் ஈந்தளிக்க வல்லார்க்குத் தன்சொலால்
தான்கண் டனைத்திவ் வுலகு"

\- திருவள்ளுவர்

" தங்கள் குழந்தைகள் நேர்மைமிகுந்தவர்களாக இருக்க வேண்டும் என்று பெற்றோர் விரும்பினால், முதலில் அவர்கள் தங்களையே நேர்மையானவர்களாக மாற்றிக் கொள்ளவேண்டும்."

**R. G. Ingersoll**

நேர்மையுடன் வாழும் திறமையை ஒரு குழந்தை வளர்த்துக்கொள்ளும் போது தான் அந்தக்குழந்தையின் படிப்பு ஆரம்பமாகின்றது.

**- John Ruskin**

பிள்ளையார் நேரச்சுப்பதிப்பகம் நல்லூர், யாழ்ப்பாணம்.